<u>காங்கயம் நகராட்சி</u>
<u>மன்றக்கூட்டத்தாள்</u>

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் பங்குனி 28–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 ஏப்ரல் 11 -ம் தேதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**<u>மன்றப்பொருள்:1</u>**

**கோப்பு எண் : 482 /2018/அ1**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டம் திருத்தம்) சட்டம்–2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)க்கு கீழ்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**

**5.In section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920,in sub-section (1),**

(1) for clause ( c), the following clause shall be substituted, namely:-

“(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax:”:

(2) In the proviso, for the Expression “clauses (a), (c) and (e)”, the expression ‘‘clauses (a) and (e)” shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கல்விநிறுவனங்களின் கட்டிடங்களுக்கு கீழ்கண்ட நடைமுறைகளின்படி சொத்துவரி நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,

2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்,

3. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்,

4. கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்ற சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்,

5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 83 (1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்,

6. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 78 (3)–ன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்தவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.865 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:2</u>**

**கோப்பு எண் :1594/2014/சி1**

காங்கயம் நகராட்சியில் ஒப்பந்ததாரருக்கு வழங்கும் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யும் வருமான வரி மற்றும் கடை வாடகைதாரருக்கு மாத வாடகையில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி ஆகியவற்றை 2017– 2018 ஆம் நிதியாண்டிற்கு E-Filling செய்தமைக்கான செலவுகளை அனுமதித்தும் மற்றும் 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்.866 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:3</u>**

**ந.க.எண்.51/2018/சி1**

அரசாணை எண்.MS.NO.157, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV), நாள்.03.11.2016–இன் படி தேசிய செஞ்சிலுவை சங்கத்தின் ஆண்டு சந்தா தொகை ரூ.2500/– லிருந்து ரூ.5000/–மாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி தேசிய செஞ்சிலுவை சங்கத்தின் ஆண்டு சந்தா தொகையாக ரூ.5000/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 867 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:4</u>**

**கோப்பு எண் : 1773 /2017 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு செந்தமான ஈப்பு வாகனத்திற்கு மாதாந்திர மற்றும் காலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்யுள்ளது. மேலும், குடிநீர் பணிகள், வருவாய் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆய்வு மற்றும் உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கலந்தாய்வு போன்ற பணிகள் தடையின்றி நடைபெற ஈப்பு வாகனம் பராமரிப்பு பணிகள் அவசியமாக உள்ளது. எனவே, பராமரிப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான CAI Mahindra நிறுவனத்தில் உடனுக்குடன் மேற்கொள்ளவும், வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்புத்தொகையை யுனைடெட் இண்டியா நிறுவனத்தில் செலுத்தவும் ஒரு ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 2.25 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**
மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 868 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:5</u>**

**கோப்பு எண் : 1386 /2016 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு செந்தமான சென்னிமலை ரோடு குப்பைக் கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Bio mining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.103.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்று மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், மதிப்பீட்டு தொகையை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், உரிய கருத்துருக்கள் அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**
மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.869 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:6</u>**

**கோப்பு எண் .612/2018/சி1**

நகராட்சி நிர்வாகம் சார்பில் நகர்புற நிர்வாக கட்டிட சங்கம் ஏற்படுத்துவது தொடர்பாக நகராட்சிகளின் மூன்றாவது தவணை பங்கு தொகை ரூ.2,60,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஆறுபதாயிரம் மட்டும்) செலுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.30322/2012/இ3, நாள்.03.04.2018–இன்படி

அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 870 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 155 /2015 /அ2**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 48 கடைகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு குத்தகைதாரர்களுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து புதுப்பித்து கொள்ள 46 கடை உரிமதாரர்கள் சம்மத கடிதம் தெரிவித்தனர். மற்றும் நகரபேருந்து கடை எண்.6 மற்றும் 11 அகிய இரண்டு கடை உரிமைதாரர்கள் வேண்டாம் என விண்ணப்பம் கொடுத்துள்ளனர். மேற்கண்ட 46 கடை உரிமதாரர்களுக்கு குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்கவும் மற்றும் நகரபேருந்து கடை எண்.6 மற்றும் 11 ஆகிய இரண்டு கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | உரிமதாரின் பெயர் | 01.04.2015 முதல் 31.03.2018 முடிய ரூ. | 01.04.2018 முதல் 31.03.2021 முடிய ரூ. |
|---|---|---|---|---|
| **சென்னிமலை ரோடு வாரச் சந்தை கடைகள்** | | | | |
| 1 | 1 | எஸ்.என்.சுப்பிரமணியம் | 2358 | 2712 |
| 2 | 2 | என்.தங்கவேல் | 2358 | 2712 |
| 3 | 3 | எஸ்.என்.சுப்பிரமணியம் | 2358 | 2712 |
| 4 | 4 | முத்தையன் | 2358 | 2712 |
| **சென்னிமலை ரோடு நகரப் பேருந்து கடைகள்** | | | | |
| 5 | 1 | ரெங்கசாமி | 30500 | 35075 |
| 6 | 2 | கே.கே.கபழனிசாமி | 10695 | 12299 |
| 7 | 3 | அப்புகுட்டி | 8395 | 9654 |
| 8 | 4 | பூபதிராஜா | 9500 | 10925 |
| 9 | 5 | என்.கிருஷ்ணசாமி | 6440 | 7406 |
| 10 | 6 | எம்.சேமலையப்பன் | 7245 | 8332 |
| 11 | 7 | டி.சுப்பிரமணியம் | 5100 | 5865 |
| 12 | 8 | எம்.சின்னசாமி | 3795 | 4364 |
| 13 | 9 | என்.கிருஷ்ணசாமி | 3600 | 4140 |
| **ஊராட்சி ஒன்றிய கடைகள்** | | | | |
| 14 | 1 | தேவணன் | 3105 | 3571 |
| 15 | 2 | ராஜலிங்கம் | 3105 | 3571 |
| 16 | 3 | கே.எஸ்.ராமசாமி | 3048 | 3505 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 4 | ராஜலிங்கம் | 3278 | 3770 |
| 18 | 5 | கே.ஏ.ஈஸ்வரன் | 3220 | 3703 |
| **நகரபேருந்து கடைகள்** | | | | |
| 19 | 1 | பொன்னுசாமி | 7245 | 8332 |
| 20 | 2 | டி.சுப்பிரமணியம் | 7015 | 8067 |
| 21 | 3 | ராமசாமி கவுண்டர் | 4830 | 5555 |
| 22 | 4 | பரிதாபானு | 10465 | 12035 |
| 23 | 5 | ஆர்.முருகேசன் | 9250 | 10638 |
| 24 | 6 | வெங்கடாசலம் | 17500 | 20125 |
| 25 | 7 | சலீம் | 13800 | 15870 |
| 26 | 8 | ஏ.சபீர்உசேன் | 5405 | 6216 |
| 27 | 9 | எஸ்.அபுதாகீர் | 10465 | 12035 |
| 28 | 10 | பி.பாலகிருஷ்ணன் | 6210 | 7142 |
| 29 | 11 | அர்ச்சுனசாமி | 17250 | 19838 |
| 30 | 12 | எம்.சின்னசாமி | 8740 | 10051 |
| 31 | 13 | பிரேமலதா | 6500 | 7475 |
| 32 | 14 | கலிலுல்லா | 7590 | 8729 |
| 33 | 15 | கோவிந்தசாமி | 6000 | 6900 |
| 34 | 16 | பர்வீன் | 7100 | 8165 |
| 36 | 17 | ரமேஷ் | 4715 | 5422 |
| 37 | 18 | சிவக்குமார் | 9200 | 10580 |
| 38 | 19 | பர்வீன் | 8625 | 9919 |
| 39 | 20 | கலிலுல்லா | 6555 | 7538 |
| 40 | 21 | பொன்னுசாமி | 6670 | 7671 |
| **அண்ணா மறுமலர்ச்சி கடைகள்** | | | | |
| 41 | 1 | பொன்னுசாமி | 4485 | 5158 |
| 42 | 2 | ரவிக்குமார் | 4140 | 4761 |
| 43 | 3 | எஸ்.பாலாசுப்பிரமணியம் | 4313 | 4960 |
| 44 | 4 | முத்துசாமி | 4485 | 5158 |
| 45 | 5 | சாதீக் | 5405 | 6216 |
| **தினசரி மார்கெட் வடக்கு பார்த்த இறைச்சி கடைகள்** | | | | |
| 46 | 3 | சிவக்குமார் | 1438 | 1654 |
| 47 | 4 | கமர்தீன் | 1438 | 1654 |
| 48 | 5 | சண்முகசுந்தரம் | 2300 | 2645 |
| **தினசரி மார்க்கெட் தெற்கு பார்த் கடை** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 49 | 13 | பொன்னுசாமி | 5200 | 5980 |

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 871 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 2257/2017/அ2**

காங்கயம் நகராட்சிக்கு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களிடம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்களை வசூலிக்க ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.782, நாள்.05.02.2018—இன்படி ரூ.40000/— (ரூபாய் நாற்பதாயிறம்)—க்கு அனுமதிக்கப்பட்டுள்ளதின் பேரில் இது நாள் வரை ரூ.40000/— முழுமையும் செலவிடப்பட்டுவிட்டது. தற்பொழுது 2017—18ம் ஆண்டு வரி வசூல் துரிதப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு ஆட்டோ விளம்பரம் மூலம் அறிவிப்பு செய்ய கூடுதலாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/—க்கு (ரூபாய் நாற்பதாயிறம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.872 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**ந.க.எண். 560 /2017/அ2**

காங்கயம் நகராட்சி 2018—2019 ஆம் ஆண்டிற்கு அனைத்து பொது பிரிவுகளில் சம்மந்தப்பட்ட பொருள்கள் குறித்து உள்ளூரில் விளம்பர பலகை தட்டிகள் வைப்பதற்கும் மற்றும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதற்கும் ஆகும். உத்தேச செலவுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவவக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 873 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்புஎண். 622/2018/அ2**

காங்கயம் நகராட்சி பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகளுக்கு தேவையான டோனர்கள் மற்றும் கணினி உபகரணங்கள் 2018 –2019 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 874 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்புஎண். 622/2018/அ2**

காங்கயம் நகராட்சி பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகளுக்கு தேவையான A4பேப்பர்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் ,கணினிக்கு தேவைப்படும் இரசீதுகள் மற்றும் பதிவேடுகள் 2018–2019–ஆம் ஆண்டிற்க்கு வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.875 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**கோப்பு எண் : 419/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018–19 ன் கீழ்ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி கரூர் ரோட்டில் சாலையின் தெற்கு பகுதியில் ரவுண்டானாவிலிருந்து கிழக்காக அமைக்கப்பட்டுள்ள வடிகாலை அகற்றிவிட்டு சாலையின் ஓரமாக புதிதாக வடிகால் அமைக்கும் பணிக்காக 06.04.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. எஸ். சுப்பையா | மதிப்பீட்டை விட + 4.99 % | அதிகம் |
| 2.ஆர்.வடிவேல் | மதிப்பீட்டை விட + 6.42 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.876 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

**கோப்பு எண் : 253/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ்ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி சென்னிமலை ரோடு கிழக்கு பகுதியில் தனித்துணைக்குழாய் அமைக்கும் பணிக்காக 10.04.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 4.90 % அதிகம்
2. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட + 6.90 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 877 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:14</u>**

**கோப்பு எண் : 254/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ்ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி சென்னிமலை ரோடு கிழக்கு பகுதியில் சாலையின் ஓரமாக குடிநீர் விநியோக குழாய் பதித்தல் மற்றும் செம்மாங்காளிபாளையம் ஊருக்குள் மற்றும் கிழக்கு பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக 10.04.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 4.95 % அதிகம்
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 5.97 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 878 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:15</u>**

**கோப்பு எண் : 518 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி திட்டங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் தினசரி விநியோகம் செய்யும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு அய்யாச்சாமி நகர் காலணி நீரேற்றம் செய்யும் இடத்தில் உள்ள மின்மோட்டார் திறன் குறைவாக உள்ளதால் இதற்கு பதில் புதிய மின்மோட்டார் 2000 Lpm x 100m பொருத்துவதற்கும் மற்றும் IB டேங்க், எம்.ஜீ.ஆர் காடு டேங்க் ஆகிய இரண்டு டேங்குகளில் நீர் ஏற்றுவதற்கு ஏற்ப அமைப்புகள் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.879 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:16</u>**

**ந.க.எண்.<u>742/2018/சி1</u>**

காங்கேயம் நகராட்சியின் 2016–2017ஆம் ஆண்டிற்குரிய ஐந்தொகை கணக்கு வரவு செலவு அறிக்கை, பொது பேரேடு தயாரித்தல் மற்றும் பிரிண்ட் எடுத்து புத்தகங்கள் தயார் செய்தல் மற்றும் இறுதி இணக்க பதிவேடு தயாரித்தல் ஆகிய பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.45,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் இத்தொகையினை திரு.அழகர்சாமி என்பவருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.880 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:17**

**கோப்பு எண் : 1386 /2016 /இ1**

காங்கயம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காங்கயம் நகராட்சி வாரச்சந்தை வளாகத்தில் 2 டன் கொள்ளளவுள்ள சிறு உரக்கிடங்கு அமைக்கும் பணி | 37.00 |
| 2 | காங்கயம் நகராட்சி வாரச்சந்தை வளாகம் பகுதியில் அமைக்கும் சிறு உரக்கிடங்கு உபயோகத்திற்கு மின்சார பேட்டரியால் இயங்கும் 5 வாகனங்கள் வாங்கும் பணி | 10.25 |
| | **மொத்தம்** | **47.25** |

மேற்படி பணிகள் மேற்கொள்ள ரூ.47.25 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்து ஏழு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், மதிப்பீட்டு தொகையை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், உரிய கருத்துருக்கள் அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 881 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:18**

**கோப்பு எண் : 155 /2015 /அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சென்னிமலை ரோட்டில் அமைந்துள்ள சிந்தாமணி அங்காடிக்கு கிழக்கு பக்கம் காலியாக உள்ள காலியிட கடைக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து புதுப்பித்து கொள்ள குத்தகைதாரர் சம்மத கடிதம் தெரிவித்துள்ளார். குத்தகைதாரருக்கு குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | உரிமதாரின் பெயர் | 01.04.2015 முதல் 31.03.2018 முடிய ரூ. | 01.04.2018 முதல் 31.03.2021 முடிய ரூ. |
|---|---|---|---|---|
| சென்னிமலை ரோடு கிழக்கு பார்த்த காலியிட கடை | | | | |
| 1 | 1 | டி. சுரேஷ் | 2000 | 2300 |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 882 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:19**

**கோப்பு எண் : 502/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் குடிநீர் திட்டம் மற்றும் சிறுமின்விசைப்பம்பு திட்டங்களின் குடிநீர் விநியோகத்தில் கீழ்க்காணும் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1. திருவள்ளுவர்வீதி குடிநீர் விநியோகத்தை சீரமைக்க கேட்வால்வுகள் பொருத்தப்பட வேண்டும்.
2. திருப்பூர் ரோடு பகுதியில் ஐ.பி டேங்கிலிருந்து வரும் 8” மெயின்குழாயை சந்தைப்பேட்டை குடிநீர் விநியோகத்தில் இணைத்து பட்டேல் வீதி, அண்ணாநகர் குளத்து வீதி, ஜனனி நகர், ஆசிரியர் குடியிருப்பு, கே.எஸ்.ஆர் வீதி, கே.ஆர் டுட்டோரியல் சந்து மற்றும் தாராபுரம் ரோடு மெயின்வீதி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தை சீரமைத்தல்.
3. பழையகோட்டை ரோடு , தீரன் நகர், மூர்த்திரெட்டிபாளையம், பாரத்நகர், பொதிகை நகர், குறிஞ்சி நகர், சென்னிமலை ரோடு பகுதிகளை சந்தைப்பேட்டை பகுதி மேல்நிலைத் தொட்டி மண்டலத்தில் விநியோகம் செய்ய இணைப்பு வேலைகள் செய்தல்
4. கோவை ரோடு புதியதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டி மண்டலத்தில் பங்களாப்புதூர் ரோடு, கச்சேரி வீதி, ஆசிரியர் குடியிருப்பு மேல்பகுதி, ஓம் சக்தி வீதி, மற்றும் வக்கீல் வீதி பகுதிகளை இணைத்து குடிநீர் விநியோகம் செய்ய இணைப்பு வேலைகள் செய்தல்
5. லட்சுமி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டி பழுதடைந்து உடைந்துள்ளதால் இதனை அகற்றிவிட்டு புதியதாக 5000 லிட்டர் தண்ணீர் தொட்டி அமைத்தல்.

மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதியும் அத்தியாவசியம் கருதியும் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகள் மேற்கொள்வதற்கு த உத்தேச மதிப்பீடு ரூ. 9.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.883 . நாள்.11.04.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

**கோப்பு எண் : 516/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு மேற்கு பகுதியில் குடிநீர் இணைப்புகள் வேண்டி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது. எனவே, இப்பகுதியில் பகிர்மானகுழாய் அமைக்கப்படாத வீதியில் குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது.

கொங்கு நகர் பகுதியில் சிறு மின்விசைப்பம்பு திட்டத்தின் நீரேற்று குழாய் பழுதடைந்துள்ளது. இதனால் ஒரு பகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத நிலையுள்ளது. எனவே, இந்த குழாயை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

அய்யாச்சாமி காலணி பகுதியில் தார்சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறுவதால் இதற்காக இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் சிறுமின்விசைப் பம்பு திட்டத்தின் மெயின்குராய்களை சாலையின் ஓரமாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

சௌடாம்பிகை நகர் பகுதியில் குடிநீர் விநியோகத்தை சீரமைக்க இணைப்பு வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. லட்சுமி நகர் பகுதியிலும் குடிநீர் விநியோகத்தை சீரமைக்க இணைப்பு வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஐ.பி டேங்கில் குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு மேல்நிலைத்தொட்டியின் கீழ் இணைப்பு வேலைகள் செய்ய வேண்டியுள்ளது.

லட்சுமி நகர் பகுதியில் தண்ணீர் தொட்டி மேடை மற்றும் தண்ணீர் தொட்டி பழுதடைந்து உடைந்துள்து. எனவே, புதியதாக மேடை அமைத்து தண்ணீர்தொட்டி பொருத்த வேண்டியுள்ளது.

பொதிகை நகர் பகுதியில் புதியதாக கேட்வால்வு பொருத்த வேண்டியுள்ளது.

மேலும் இந்நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் தண்ணீர் அளவு பார்க்கும் வசதிக்காக அளவுகோல் மற்றும் இன்டிகேட்டர் பொருத்த வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 884 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:21**

**கோப்பு எண் : 515 /2017/எச்1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 2018-2019 நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வகை செலவினங்களுக்கு தேவையான கீழ்கண்ட உத்தேச செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | உத்தேச செலவு விபரம் |
|---|---|---|
| 1. | சுகாதார மேற்பார்வையாளர்கள், இரவுக் காவலர், பேருந்து நிலைய காவலர், அலுவலகப் பணியாளர்கள், மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் தையற்கூலி | ரூ. 3,00,000/- |
| 2. | லாரி தகுதி சான்று பெறுதல், மற்றும் இதர பொது சுகாதார வாகனங்கள் தகுதி சான்று மற்றும் பழுது நீக்கம் பணி செய்தல், மற்றும் உதிரிபாகங்கள் வாங்குதல் | ரூ. 4,50,000/- |
| 3. | வாகனங்களுக்கு காப்பீட்டுத் தொகை மற்றும் சாலைவரி கட்டணம் | ரூ. 4,50,000/- |
| 4. | ஒப்பந்தபுள்ளி விளம்பர செலவினம் | ரூ.1,00,000/- |
| 5. | கொசு ஒழிப்பு புகை மருந்தான பைரீத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் வாங்குதல். | ரூ. 6,00,000/- |
| 6. | சாக்கடைகளில் உற்பத்தியாகும் கொசு புழுக்களை அழிக்கும் மருந்தான பேசில்லஸ் துரிஜன்சீஸ் வாங்குதல். | ரூ. 6,00,000/- |
| 7. | நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுபுழுக்களை அழிக்க, அபேட், ஈக்கள் உற்பத்தியை குறைக்க நுவான் மருந்து வாங்குதல். | ரூ. 4,50,000/- |
| 8. | பிளீச்சிங்பவுடர் , சுண்ணாம்புத்தூள் ஆகிய கிருமி நாசினிகள் வாங்குதல் | ரூ. 9,00,000/- |
| 9. | பொது சுகாதார விழிப்புணர்வு கூட்டங்கள் பேரணிகள் மற்றும் முகாம் நடத்துதல், புகைப்படம் எடுத்தல் மற்றும் ஒலிப்பெருக்கியின் மூலம் ஆட்டோ விளம்பரம் செய்தல் | ரூ.1,00,000/- |
| 10 | துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குதல் | ரூ. 3,00,000/- |
| 11. | துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல் | ரூ.2,00,000/- |
| 13. | பொது சுகாதார வாகனங்களுக்கு சிறு பழுதுகள் (பஞ்சர், வாகன சர்வீஸ், ஆயில் மற்றும் கிரிஸ் அடித்தல்) மற்றும் டயர் ரீடையரிங் மற்றும் பேட்டரி பழுது நீக்கம் செய்தல் | ரூ. 3,00,000/- |
| 14. | சாக்கடையில் உற்பத்தியாகும் கொசுக்களை ஒழிக்க தேவையான பவர் ஸ்பேரயர் புதியதாக வாங்குதல். | ரூ. 50,000/- |
| 15 | நகராட்சி பகுதியில் உள்ள பேருந்துநிலையம் பொதுக்கழிப்பிடம் மற்றும் இதர முக்கிய பகுதிகளை சுத்தம் செய்தல் பணிக்கு தேவையான கிருமி நாசினி (Lemon Cross Oil வாங்குதல்) | ரூ.9,00,000/- |
| 16 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் 2018–2019–ஆம் ஆண்டிற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கொசுப்புழு ஒழிப்பு களப்பணியாளர்கள் 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர்கள் வீதம் தற்காலிகமாக நியமித்து ஊதியம் வழங்குவதற்கான செலவுத் தொகை. | ரூ.40,00,000/– |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 885 . நாள்.11.04.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(ஒ.ம்) சு.சு. சுரேஷ்குமார்**
**ஆணையாளர்**
**மற்றும் தனிஅலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மேலாளர்**
**காங்கயம் நகராட்சி**